ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும்

தி.மு.க.வின் மக்கள் நலப்பணிகள் என்றும் தொடரும்!

சேத்துப்பட்டு சர்வோதயா மாணவிகள் விடுதியில் நல உதவிகள் வழங்கி முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேச்சு!

சென்னை, நவ. 10

சென்னை கிழக்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், மாவட்டக் கழகச் செயலாளரும், மேனாள் அமைச்சரும், துறைமுகம் சட்டமன்ற உறுப்பினருமான பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. ஏற்பாட்டில், சென்னை சேத்துப்பட்டு, எம்.சி. நிக்கோலஸ் சாலையில் உள்ள எஸ்.ஆர்.எஸ். சர்வோதயா மாணவிகள் தங்கும் விடுதியில், 100-க்கும் மேற்பட்ட மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நேற்று (09.11.2026, திங்கட்கிழமை) மதியம் 12.30 மணியளவில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், விடுதியில் தங்கிப் பயிலும் 100-க்கும் மேற்பட்ட மாணவிகளுக்குப் புத்தாடைகள், இனிப்புகள், பட்டாசுகள் மற்றும் அறுசுவை உணவு ஆகியவற்றை பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. வழங்கினார். மேலும், விடுதிக்குத் தேவையான ஒரு மாதத்திற்கான அரிசி, பருப்பு, எண்ணெய், மசாலாப் பொருட்கள் உள்ளிட்ட மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்புகளையும் வழங்கினார்.

தொடர்ந்து, மாணவிகளுடன் இணைந்து பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ., கழகச் சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ். ரவிச்சந்திரன், செய்தித் தொடர்புக் குழு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பட்டாசுகளை வெடித்து தீப ஒளித் திருநாளைக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

இந்நிகழ்ச்சியில் மாணவிகளிடையே பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. பேசியதாவது:

"மகாத்மா காந்தியடிகளால் 1942-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தச் சர்வோதயா மகளிர் பாதுகாப்பு மையத்தில், இன்றைக்கு எழும்பூர் பகுதியைச் சேர்ந்த கழகத் தோழர்கள் அனைவரும் ஒன்றிணைந்து, குறிப்பாகப் பெண் பிள்ளைகள் பாதுகாப்போடு வளர்க்கப்படுகின்ற இந்த மையத்தில் தீபாவளிக் கொண்டாட்டத்தை மேற்கொண்டதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.

இதுபோன்ற எளிய உள்ளங்கள் வளம்பெறுவதற்கும், ஏற்றத்தாழ்வுகள் மக்களிடையே அகல்வதற்கும், சமத்துவம் காண்பதற்கும் பாடுபட்டவர் எங்கள் திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்.

அந்த வகையில், ஆட்சி



யில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இதுபோன்ற மகத்தான மக்கள் நலப் பணிகள் என்றும் தொடரும்.

அனைவரும் ஒரு தாய் பிள்ளைகள்! ஒரு நாட்டு மக்கள்! வருங்காலத்தில் இந்த நாட்டை வளர்ச்சியடையச் செய்யப்போகின்ற தூண்களாக இந்தப் பிள்ளைகள் விளங்குகின்றார்கள்.

அந்தப் பிள்ளைகளின் வாழ்வு செழிக்க எல்லாம் வல்ல இறைவனையும் இயற்கையையும் இந்த நேரத்தில் வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

இந்த அரிய நிகழ்வில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்தாலும் தொடர்ந்து மக்கள் பணியாற்றி வருகின்ற அன்பிற்கினிய கே.எஸ். ரவிச்சந்திரன் அவர்களும், தமிழன் பிரசன்னா அவர்களும், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.எம்.நாதன், பொதுக்குழு உறுப்பினர் அ.நிர்மலா தேவி, மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் ராஜேஸ்வரி ஸ்ரீதர் அவர்களும், நம்முடைய எல்.சுந்தரராஜன் அவர்களும், வட்டக் கழகச் செயலாளர்கள் சி.சேகர் வி.விஜயகுமார், வான்மதி கதிரவன் உள்ளிட்ட இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த அனைவருக்கும் இந்த நல்ல நாளில் மாவட்டக் கழகச் செயலாளர் என்ற முறையில் என்னுடைய மகிழ்ச்சியையும், நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. மாணவிகளிடையே மகிழ்ச்சியுடன் உரையாற்றினார்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களைச் சந்தித்த பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. கூறியதாவது:

"கொல கொலயா முந்திரிக்கா! கொள்ளையடிப்பவன் எங்கிருப்பான்? கூட்டத்தில் இருப்பான்! கண்டுபிடி!" என்று சிறுவர்கள் விளையாடும் விளையாட்டைப் போல, இன்றைக்குத் தமிழகத்தில் கொலையோ கொலை, கொள்ளையோ கொள்ளை என்று நாடே தத்தளித்துக் கொண்டிருக்கின்றது.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், தலைநகரை இன்றைக்குக் கொலை நகராக மாற்றியிருக்கின்றது இந்த ஆட்சி.

வெட்ட வருபவன் இன்னார், இனியவர் என்று பார்ப்பதில்லை. அண்ணன் கிடைக்கவில்லை என்றால் தம்பியைப் போட்டுத் தள்ளுகிறான். அண்ணனும் தம்பியும் கிடைக்கவில்லை என்றால் தகப்பனையும் போட்டுத் தள்ளுகிறான்.

கொலைகளுக்கும் பாலியல் வன்கொடுமைகளுக்கும் வயது வரம்பே இல்லாத ஒரு ஆட்சியாக இந்த ஆட்சி மாறிக் கொண்டிருக்கிறது.

இரண்டரை வயதுக் குழந்தையும் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகிறாள். வீட்டிலேயே இருக்கின்ற 80 வயது முதியவரும் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகிறார்.

நல்ல உடல்கட்டோடு இருப்பவர்கள் வசிக்கின்ற வீடுகளிலேயும் கொள்ளை நடக்கின்றது. முதியவர்கள் எங்கெல்லாம் இருக்கின்றார்களோ, அந்த வீடுகளையும் தேடிப்பிடித்துக் கொள்ளையடித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

படித்தவர்கள் முதல் பாமரர்கள் வரை, பால்மணம் மாறாத பச்சிளம் குழந்தைகள் முதல் கல்லறைக்குச் செல்லுகின்ற முதியவர்கள் வரை யாருக்கும் பாதுகாப்பு இல்லாத நிலை உருவாகியிருக்கிறது.

தமிழகம் ஒரு வன்முறைக் கூடாரமாகவும், வன்முறைக் களமாகவும் மாறி, இந்த ஆட்சியின் நிர்வாகத் திறமையின்மையால் சிக்கிச் சீரழிந்து கொண்டிருக்கின்றது.

தகுதியற்றவர்களைச் சட்டப்பேரவைக்கு மக்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்ததன் காரணத்தால்தான் நாடு இன்றைக்கு அலங்கோலமாக மாறி, தலைநகரம் கொலைநகரமாக மாறி விட்டது.

போதைப்பொருள் கடத்தல், கட்டப்பஞ்சாயத்து உள்ளிட்ட சட்டவிரோதச் செயல்களில் ஆளும் தமிழக வெற்றிக் கழகத்தினரே ஈடுபட்டு வருவதாகக் குற்றச்சாட்டுகள் எழுகின்றன.

"திமுக மீது *Fake Narrative* செட் செய்வதுதான் இந்த ஆட்சியின் ஒரே வேலை!"

இந்த ஆட்சியில் நடைபெறுகின்ற உருப்படியான ஒரே ஒரு பணி என்னவென்றால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது *Fake Narrative* செட் செய்வதுதான்!

தங்கள் மீது இருக்கின்ற பழியையும் அவமானங்களையும் திசை திருப்புவதற்காக அவர்கள் எடுத்துக்கொண்ட ஒரே ஆயுதம், திமுக என்ற மூன்றெழுத்துதான்!

நூலகத்தில் அடுக்கி வைத்திருக்கின்ற புத்தகங்கள் முதல் சமூகத்தில் நடைபெறுகின்ற குற்றங்கள் வரை அனைத்திற்கும் யார் காரணம் என்பது அவர்களுக்கே நன்றாகத் தெரியும். ஆனால், அவற்றையெல்லாம் திசைதிருப்பி, அதற்குக் காரணம் திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்று பல ரூபாய்களைச் செலவு செய்து நெகட்டிவ் நரேட்டிவ் செட் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

எல்லோரையும் எல்லாக் காலகட்டங்களிலும் ஏமாற்றிவிட முடியாது.

"அடுப்பு நெருப்பு பசியை ஆற்றும்! கூரை நெருப்பு குடும்பத்தையே அழிக்கும்!"

அடுப்பில் எரிகின்ற நெருப்பு மக்களின் பசியை ஆற்றும். ஆனால், கூரையில் எரிகின்ற நெருப்பு அந்தக் குடும்பத்திற்கே தீங்கு விளைவிக்கும்.

அதுபோல, அடுப்பில் எரிகின்ற நெருப்பாகத் திராவிட முன்னேற்றக் கழகமும், கூரையில் எரிகின்ற நெருப்பாகத் தமிழக வெற்றிக் கழகமும் இருக்கின்றன.

மக்கள் இன்றைக்கு உண்மையை உணர்ந்து கொண்டிருக்கின்றார்கள். மே மாதம் 4ஆம் தேதி தாங்கள் செய்த தவறை உணர்ந்து, மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றார்கள்.

வருகின்ற காலங்களில் தேர்தல் என்ற ஒன்று வருகின்றபொழுது, வாக்குரிமை என்ற ஆயுதத்தால் இந்தக் கொடூர ஆட்சியை வீழ்த்த மக்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றார்கள்.

இவ்வாறு மேனாள் அமைச்சர் பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

த.வெ.க. எம்.எல்.ஏ. ஒருவரால் மாவட்ட ஆட்சியருக்கே பாதுகாப்பு இல்லை!

கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி கண்டனம்!

சென்னை,நவ.10

த.வெ.க. எம்.எல்.ஏ. ஒருவரால் மாவட்ட ஆட்சியருக்கே பாதுகாப்பு இல்லாத நிலை தான் என்று கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. அவர்கள் சமூக வலைதளப் பதிவில் கூறியதாவது:



கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியருக்குத் தவெக சட்டமன்ற உறுப்பினர் அருள் விக்னேஷ் ஆபாசக் குறுஞ் செய்தி அனுப்பியதாகவும், மதுபோதையில் அவரது வீட்டுக்கே சென்று தொந்தரவு செய்ததாகவும், இதைத் தொடர்ந்து ஆட்சியருக்குத் தனிப் பாதுகாப்பு அதிகாரி நியமிக்கப்பட்டதாகவும் சமூக வலைதளங்களில் செய்திகள் வருகின்றன.

இந்தத் திறனற்ற தவெக ஆட்சியில், தமிழ்நாடு முழுவதும் கொலை, கொள்ளை என அடுத்தடுத்து நடக்கும் குற்றச்சம்பவங்களால் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுவிட்டது. இப் போது தவெக எம்.எல்.ஏ. ஒருவரால் மாவட்ட ஆட்சியருக்கே பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. அப்படியிருக்க, தனிப் பாதுகாப்பு அதிகாரியை நியமிப்பதன் மூலம் மட்டும் தலைமைச் செயலாளர் அந்த ஆட்சியருக்கு என்ன பாதுகாப்பைக் கொடுத்துவிடப் போகிறார்?

முதலமைச்சர் அவர்களே, இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்?

இவ்வாறு கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

24 மணி நேரத்தில் 11க்கும் மேற்பட்ட கொலைகள்:

முதலமைச்சர் விஜய் தமிழ்நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்யட்டும்!

தயாநிதி மாறன் எம்.பி. வலியுறுத்தல்!

சென்னை, நவ.10-

கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலருமான தயாநிதி மாறன் எம்.பி.யின் வலைத்தள பதிவு வருமாறு:-



தமிழ்நாட்டு மக்களுக்கு தமிழக வெற்றிக் கழக ஆட்சியின் தலை தீபாவளி பரிசு இதுதானா?

24 மணி நேரத்தில் 11க்கும் மேற்பட்ட கொலைகள்! கொல்லப்பட்டவர்களில் காவல்துறை அதிகாரியும் ஒருவர்!

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்துவிட்டது. பொதுமக்களுக்கும் பாதுகாப்பு இல்லை, தடுக்கச்சென்ற காவல்துறையினருக்கும் பாதுகாப்பு இல்லை!

முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கும் விஜய், முதலில் மாநிலத்தின் பாதுகாப்பை உறுதி செய்யுங்கள்.

சினிமா வசனங்களும், விளம்பரப் பிம்பங்களும் மக்களின் உயிரைக் காப்பாற்றாது!

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

மேகதாது அணை: தமிழ்நாட்டு முதலமைச்சருக்கு

நாட்டின் சட்டதிட்டங்கள் தெரியுமா?

கர்நாடக முதல்வர் டி.கே.சிவக்குமார் கேள்வி!

பெங்களூரு, நவ. 10-

மேகதாதுவில் அணை கட்ட யாரிடமும் அனுமதி வாங்க தேவையில்லை என்று கர்நாடக முதல்வர் டி.கே. சிவக்குமார் தெரிவித்துள்ளார்.

கர்நாடகாவில் செய்தியாளர்களைச் சந்தித்த அம்மாநில முதலமைச்சர் டி.கே.சிவக்குமார், "தமிழ்நாட்டின் முதலமைச்சருக்கு நாட்டின் சட்டதிட்டங்கள் தெரிந்திருக்கும் என்று நம்புகிறேன். மேகதாது அணை கட்டுவதற்காக யாரிடமும் அனுமதி பெற வேண்டிய அவசியமில்லை. கர்நாடகா தனது சொந்த இடத்தில் அணையைக் கட்டிக் கொள்ளலாம் என்று இந்திய உச்ச நீதிமன்றமே அனுமதி அளித்து விட்டது.

இந்த விவகாரத்தில் கர்நாடகா ஒற்றுமையுடன் உள்ளது. கட்சி வேறுபாடுகளைக் கடந்து, பா.ஜ.க. மற்றும் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் (NDA) அனைத்துத் தலைவர்களும் மேகேதாட்டு விவகாரத்தில் கர்நாடகாவுக்கு ஆதரவளிக்க ஒப்புக்கொண்டுள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சரிடம் நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால், ஒரு குழுவை அனுப்பி வையுங்கள். இந்த வாய்ப்பை நாங்கள் தவறாகப் பயன்படுத்த மாட்டோம். சண்டையிடுவதற்கோ அல்லது மோதிக்கொள்வதற்கோ இடமே இல்லை. அந்த காலம் முடிந்துவிட்டது. உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பை வழங்கிவிட்டது. நாட்டின் சட்டத்தை மதிப்போம். இணைந்து செயல்படுவோம், நீரைப் பகிர்ந்து கொள்வோம். நம்மிடையே உள்ள ஒற்றுமை உணர்வை மேலும் பலப்படுத்துவோம்" எனத் தெரிவித்துள்ளார்.

தவெக ஆட்சியின் நூலகத்துறை முறைகேடுகளை மூடிமறைக்க முயற்சி

நூலகத் துறை இயக்குநர் ஜெயந்தி பதவி பறிப்பு!

சென்னை,நவ.10-

தவெக ஆட்சியின் நூலகத்துறை முறைகேடுகளை மூடிமறைக்கும் முயற்சியாக நூலகத் துறை இயக்குநர் ஜெயந்தியின் பதவி பறிக்கப்பட்டுள்ளதாக விமர்சனங்கள் எழுந்துள்ளன.

தவெக ஆட்சிக்கு வந்த பின் கோவை பெரியார் அறிவுலகத்தில் போலி புத்தகங்கள் வைக்கப்பட்டது அண்மையில் அம்பலமானது. தவெக ஆட்சி அமைந்து 6 மாதங்கள் கடந்த பின் அம்பலமான இந்த முறைகேடுகளுக்கு முந்திய திமுக ஆட்சியின் மீது பழிபோடும் முயற்சிகளை தவெக அமைச்சர்கள் மேற்கொண்டு வருகின்றனர். புத்தகங்கள் நூலகத்திற்கு வந்து சேர்ந்ததும், அவற்றுக்கான சரிபார்ப்புப் பணிகள் மற்றும் முத்திரையிடப்பட்ட தேதிகள் யாவும் தவெக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான் நடந்துள்ளன. இந்த போலிப் புத்தகங்கள் குறித்து உரிய விசாரணை நடத்தக் கோரி திமுக சார்பில் லஞ்ச ஒழிப்புத் துறையிடம் புகார் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், இது குறித்து உரிய விசாரணை நடத்துவதற்கு மாறாக, மற்றவர்கள் மீது பழி போடுவதிலேயே தவெக ஆட்சியாளர்கள் குறியாக உள்ளனர். இந்நிலையில், தவெக அரசின் முறைகேடுகளை மூடிமறைக்கும் முயற்சியாக நூலகத் துறை இயக்குநர் ஜெயந்தியின் பதவி பறிக்கப்பட்டுள்ளதாகவும், முறைகேடுகளுக்கு உதவும் வகையில் புதிய இயக்குநராக சஜீவனா நியமிக்கப்பட்டுள்ளதாகவும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

கடந்த காலங்களில் கஞ்சா விற்பவர்களை தேடிப் பிடித்து வந்த காவல்துறை

த.வெ.க. ஆட்சியில் கஞ்சா வைப்புத் துறையாக மாறி உள்ளது!

தி.மு.கழகம் கடும் தாக்கு!

சென்னை, நவ. 10 -

கடந்த காலங்களில் கஞ்சா விற்பவர்களை தேடிப் பிடித்து வந்த காவல்துறை, த.வெ.க. ஆட்சியில் கஞ்சா வைப்புத் துறையாக மாறி உள்ளது என்று தி.மு.க. குற்றம் சாட்டியுள்ளது.

இதுகுறித்து, தி.மு.க. தனது எக்ஸ் தள பதிவில் கூறியிருப்பதாவது:

கடந்த காலங்களில் கஞ்சா விற்பவர்களை தேடிப் பிடித்து வந்த காவல்துறை, டம்மி சிம்சார் ஆட்சியில் கஞ்சா வைப்புத் துறையாக மாறி உள்ளது.

1000 கோடி மெத் போதைப் பொருளை கடத்திய போதை கடத்தல் மன்னன் த.வெ.க. பூபாலனை கைது செய்யாத சிம்சாரின் ஏவல் துறை, சிவகங்கை திருப்பத்தூர் திருக்காள பட்டியில் டாஸ்மாக்கிற்கு எதிராக போராடிய வணிகரின் கடையில் கஞ்சாவை மறைத்து வைத்து, அவரை கைது செய்ய முயன்றுள்ளது. குற்றவாளிகளை எல்லாம் ப்ரீயா தப்பிக்கவிட்டு பொது மக்களை பிடித்து சிறையில் அடைக்க துடிக்கிறது துப்பு கெட்ட த.வெ.க. அரசு.

ஒருபக்கம் த.வெ.க. நிர்வாகி மெத் போதை பொருள் கடத்துகிறார். மறுபக்கம் போலீசாரே கஞ்சா வைக்கிறார்கள். இதற்கிடையில் டம்மி சி.எம். விஜய் போதை ஒரு ஜாலி என மாணவர்களிடம் பேசுகிறார். இதுதான் தூய சக்தியின் போதை ஒழிப்பு லட்சணம். இதுவா தூய சக்தி என மக்கள் தூ.. தூ.. என துப்புகிறார்கள். டாஸ்மாக்கிற்கு எதிராகப் போராடியதால், காவல்துறையாலேயே கஞ்சா வைக்கப்பட்டு பாதிப்புக்கு உள்ளான சிங்கம்புணரி வணிகருடன் கழகம் உறுதியோடு துணை நிற்கிறது. தொடர்புடைய காவல் துறை அதிகாரிகள் மீது துறை ரீதியாகவும், குற்ற வழக்குப் பதிவு செய்தும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். காவல்துறைக்கு பொறுப்பான டம்மி முதல்வர் விஜய் பாதிக்கப்பட்ட வணிகரிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்.

இவ்வாறு பதிவில் கூறப்பட்டுள்ளது.

78வது வட்டச் செயற்குழு உறுப்பினர்

ஜெ.விக்னேஸ்வரன் மனைவி அனிதா மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

சென்னை நவ:10

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் வடக்கு பகுதி, 78வது வட்ட செயற்குழு உறுப்பினர் ஜெ. விக்னேஸ்வரன் மனைவி வி. அனிதா அவர்கள் நேற்று 9.11.2026 அன்று மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



அன்னாரின் மறைவு செய்தி அறிந்து கழகத்தினர் அவரது உடலுக்கு மலர் மலைகள் வைத்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அன்னாரின் உடல் இன்று எண்: 14, பிஷப் சந்து புரசைவாக்கம் இல்லத்தில் இருந்து புறப்பட்டு ஓட்டேரி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.

ஓட்டுநர்கள் தேவை !

முரசொலி அலுவலகத்தில் ஜீப், வேன் மற்றும் எலக்ட்ரிக் ஆட்டோ இயக்குவதற்கு முன்னனுபவம், உரிய கல்விச் சான்று, ஓட்டுநர் உரிமம் மற்றும் பணியின் அனுபவச் சான்று இத்தனையும் உள்ளவர்கள் பகல் மற்றும் இரவுப் பணிக்கு சுழற்சி முறையில் பணியாற்றிட கீழ்க்கண்ட முகவரியில் (ஞாயிற்றுக்கிழமை தவிர்த்து) அலுவலக நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணிக்குள் நேரில் அணுகவும்.

நேரில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :-
பொதுமேலாளர்
முரசொலி – நாளிதழ்
180, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை – 600 034.
தொலைபேசி : 044– 45849900